1990 மே 9]

திரு. மொஞ்சனூர் ப. ராமசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையில் 5 ஆண்டுகள் பணி புரிந்து அந்தப் பணியில் இருந்து விலக்கியவர்களை மீண்டும் அந்தப் பணியில் சேர்த்துக் கொள்வதற்கு அவர்கள் பணி புரிந்த 5 ஆண்டுக் காலத்தை கணக்கில் எடுத்துக் கொண்டு, அவர்கள் வயது வரம்பு மிகுந்து போகாமல் அந்தப் பணிக் காலத்தை எடுத்துக்கொண்டு, அவர்கள் மீண்டும் பணியில் அமர்த்தப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

9-40 மணி

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிப்பதைப் போன்று தனிப்பட்ட வழக்குகள் அல்லது தனிப்பட்ட பிரச்சினைகள் அப்படி ஏதாவது இருக்கு மானால் அது அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால், அது பரிசீலிக்கப்படும்.

திரு. கே. ஆர். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பயிற்சி பெற்ற கூட்டுறவு விவசாய நாணயச் சங்க செக்ரட்டரிகள், மத்திய வங்கி ஊழியர்களாக மாற்றப் படுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொஞ்சம் விளக்கமாக, புரிந்து கொள்ளத்தக்க வகையில் தனிக் கேள்வி போட்டால் நலமாக இருக்கும்.

பையூர் வேளாண்மை ஆராய்ச்சி பண்ணையை விரிவுப்படுத்துதல்

* 8131 திரு. வி. சி. கோவிந்தசாமி :

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :—

(அ) கிருஷ்ணகிரி வட்டம், காவேரிப்பட்டினம் தொகுதி பையூர் வேளாண்மை ஆராய்ச்சி பண்ணையை விரிவுபடுத்த அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) கிருட்டிணகிரி வட்டம், காவேரிப்பட்டணம் தொகுதி பையூர் வேளாண்மை ஆராய்ச்சிப் பண்ணையின் மொத்தப் பரப்பளவு 38.71 எக்டேராகும். இந்தப் பரப்பில் 18.51 எக்டேர் நிலத்தில் மட்டும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எஞ்சியுள்ள 20.20 எக்டேர் நிலத்தை சீர்செய்து மா, திராட்சை, காய்கறிகள் மற்றும் பண்ணைக் கருவிகள் பற்றிய ஆய்வுகள், இந்திய வேளாண்மை அராய்ச்சிக் கழகத்தின் நிதியுதவியுடன் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதனை விரிவுபடுத்த கூடுதல் பரப்பளவு நிலம் வாங்க தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் உத்தேசித்துள்ளது.

திரு. வி. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பையூர் வேளாண்மைப் பயிற்சி நிலையம் சிறப்பு வாய்ந்தது. பையூர்-1 என்ற நெல் ரகம் அங்கே கண்டு பிடிக்கப்பட்டு, நல்ல விளைச்சல் தருகிறது. ஆகவே இன்னும் சில ஏக்கரா நிலத்தைக் கையகப்படுத்தி, விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கும் திட்டம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் முன்பு பதில் சொல்கிறபோதே, மேலும் நிலத்தைக் கையகப்படுத்தி, இந்த ஆராய்ச்சிப் பண்ணையை விரிவுபடுத்த உத்தேசம் இருக்கிற தென்றுதான் பதில் தந்தேன். இந்த ஆண்டு தேசிய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் நிதி உதவியான ரூபாய் 19.01 இலட்சத்தில் இந்த ஆராய்ச்சிப் பண்ணையில் எஞ்சியுள்ள 20.20 எக்டேர் நிலத்தைச் சீர் செய்து, மா, திராட்சை, காய்கறிகள் மற்றும் பண்ணைக் கருவிகள் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

டாக்டர் க. காஞ்சனா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்களும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களும் ஒத்துழைப்பு கொடுத்து ஏற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையோடு ஒரு தகவல். சேலம் ஜில்லா மாம்பழம் என்று பெயர்தான் வழக்கில் வந்து விட்டதே தவிர, உள்ளபடியே சுவை மிகுதியான சாறு, சத்து, மணம், குணம் நிறைந்த பாதிரி, பச்சரிசி, மல்கோவா போன்ற மாம்பழங்கள் அதிகமாக வளர்வது எங்கள் தர்மபுரி மாவட்டம் தான். இந்த ரகங்கள் அன்னியில், சுவை மிகுந்த புதிய மாம்பழ ரகங்களை உற்பத்தி செய்ய, எங்கள் பையூர் வேளாண்மை ஆராய்ச்சிப் பண்ணையில் மேற்கொள்ளவிருக்கிற ஆராய்ச்சி அமைய வேண்டுமென்று அரசு அறிவுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

1990 மே 9]

மாண்புமிகு திரு. வீரபாண்டி சேர். ஆறுமுகம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்றைய தர்மபுரி மாவட்டத்தில், குறிப்பாக கிருஷ்ணகிரி பகுதியில் நல்ல ருசியுள்ள மாம்பழம் உற்பத்தியானாலும், அதற்குப் பெயர் சேலம் மாம்பழம் என்பது தான்.

இராசிபுரம் நகரின் புறவழிச் சாலை

*2152 திரு. ஏ. சுப்பு :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இராசிபுரம் நகரில் புறவழிச் சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

9-45 மணி

திரு. ஏ. சுப்பு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இராசிபுரம் நகரத்தில் புதிய பேருந்து நிலையம் செயல்படத் துவங்கியதும் மிகுந்த நெருக்கடியான நிலையை உண்டாக்கும். ஆகவே ஆத்தூர் சாலையையும், நாமக்கல் சாலையையும் இணைக்கும் புறவழிச் சாலையாவது உடனடியாக ஏற்படுத்த அரசு மறுபரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : துணைத் தலைவர் அவர்களே, தற்போது இராசிபுரத்தில் பேருந்து நிலையம், ஆத்தூர்-இராசிபுரம் சாலையிலே அமைந்து இருக்கிறது. இதை ஊருக்கு மத்தியிலே இருக்கிற சந்தைத் திடலில் மாற்ற ஏற்பாடு நடந்து கொண்டிருக்கிறது. பேருந்து நிலையம் சந்தைத் திடலுக்குப் போனதற்குப் பிறகு மேலும் போக்குவரத்து நெருக்கடி இருக்குமானால் அது குறித்து பின்னர் முடிவு செய்யலாம். ஏனென்று கேட்டால் அந்த புறவழிச் சாலையை அமைப்பது என்று சொன்னால் அதிகமான தொகை வேண்டி இருக்கிறது. எனவே நிலைமையை முதலிலே பார்த்து பின்னர் முடிவு எடுக்கலாம்.